©
GOVERNMENT OF TAMIL NADU
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[Price : Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 26A] CHENNAI, WEDNESDAY, JULY 8, 2009
Aani 24, Thiruvalluvar Aandu–2040.

## Part VI—Section 2

**(Supplement)**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI.

**Notification No. TNERC / NCES Regn. / 16/5, dated 08-06-2009**

*[Lr. No. TNERC/AD(L)/F. Notification/D-857/2009.]*

No. VI(2)/345/2009.

Whereas, the Tamil Nadu Electricity Regulatory Commission under Section 61(h) read with Section 86(1)(e) and Section 181 of the Electricity Act, 2003, specified and notified in the *Tamil Nadu Government Gazette,* dated the **27th February 2008,** the **Power Procurement from New and Renewable Sources of Energy Regulations, 2008.**

And Whereas it is considered necessary to issue certain amendments to the above Regulations and such amendments shall be subject to the condition of the previous publication and accordingly undergone such previous publication.

Now, Therefore, in exercise of the powers conferred under section 61(h) read with Section 86(1) (e) and Section 181 of the said Electricity Act, 2003, and all other powers enabling it in that behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby makes the following Amending Regulations to the Power Procurement from New and Renewable Sources of Energy Regulations, 2008 (herein referred to as the principal regulations) issued under Notification No. TNERC/NCES Regn./16/1, dated 8th February, 2008 and published in Part VI—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 27th February 2008:—

**Amending Regulations:**

1. **Short title and commencement:**

(a) These Regulations may be called the Power Procurement from New and Renewable Sources of Energy (Second Amendment) Regulations, 2009.

(b) They shall come into force on the date of their publication in the *Tamil Nadu Government Gazette.*

2. **Amendment of regulation 3 of the Principal Regulations:**

In sub-regulation (3) of Regulation 3 of the Principal Regulations, in the second proviso for the expression “entire cost of interfacing lines”, the expression “depreciated (Written down value) cost of interfacing lines” shall be substituted.

(By Order of the Commission)

R. BALASUBRAMANIAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
22nd June 2009.



DTP—VI-2 Sup. (26A)

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

### (அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ/மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறை விதி/16/5, 08–06–2009 நாளிட்டது)

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86(1)(e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61(h) பிரிவின்படி, 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறை விதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் அது, மேலேயுள்ள ஒழுங்குமுறை விதிகளைத் திருத்துவதற்கு ஒருசில திருத்தங்களைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்தைய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளபடியாலும்,

தற்போது, அதற்காக, மேற்சொன்ன 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86(1)(e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61(h) பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ/மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதி/16/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI—பிரிவு 2–ல் வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது :—

### திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2009ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் (இரண்டாம் திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று கூறப்படும்.

(b) இவை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்:**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், இரண்டாம் வரம்புரையில், ''இடைத்தள மின் தொடர்களின் முழுமையான செலவுத்தொகை'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''இடைத்தள மின் தொடர்களின் தேய்மான (மதிப்புக்குறைக்கப்பட்ட) செலவுத் தொகை'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 008,
2009 ஜூன் 22.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI.

**Notification No. TNERC/SC/ 7-13, dated 15-06-2009.**

*[Lr. No. TNERC/AD(L)/F. Notification/D-858/2009.]*

No. VI(2)/346/2009.

WHEREAS, the Tamil Nadu Electricity Regulatory Commission specified and notified the Tamil Nadu Electricity Supply Code under section 50 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003) and published in Part VI—Section 2 of *Tamil Nadu Government Gazette,* dated the 1st September 2004.

AND, WHEREAS, certain difficulties with regard to cheque payment by consumers, have been brought to the knowledge of the Tamil Nadu Electricity Regulatory Commission;

AND, WHEREAS, it is considered necessary to issue certain amendments to regulations in the Tamil Nadu Electricity Supply Code removing the difficulties with regard to restoration of cheque payment by consumers, and such amendments shall be subject to the condition of previous publication and accordingly undergone such previous publication;

NOW, therefore in exercise of the powers conferred on it by section 50 read with section 181 of the Electricity Act 2003 (Central Act 36 of 2003) and all other powers enabling it in this behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby specifies the following amendments:—

TAMIL NADU ELECTRICITY SUPPLY (AMENDMENT) CODE 2009

**1. Short title and commencement:**

(*a*) This Code may be called the **Tamil Nadu Electricity Supply (Amendment) Code, 2009.**

(*b*) It shall come into force on the date of its publication in the *Tamil Nadu Government Gazette.*

**2. Amendment of Regulation 15 of the Tamil Nadu Electricity Supply Code:**

(*a*) In regulation 15 of the Tamil Nadu Electricity Supply Code, in sub-regulation (2), in the second sentence, after the expression "the distribution licensee", the expression "or through electronic payment as stipulated by the said distribution licensee." shall be added.

(*b*) in sub-regulation (3);—

(*i*) in the first sentence, after the expression "where the Distribution office is located", the expression "or through electronic payment as stipulated by the distribution licensee." shall be added;

(*ii*) for the expression " for a second occasion", occurring in the seventh sentence, the expression "upto fourth occasion" shall be substituted.

(By Order of the Commission)

R. BALASUBRAMANIAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
22nd June 2009.

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ/SC/7–13, 15–06–2009 நாளிட்டது)**

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினைக் குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI—பிரிவு 2–ல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும், நுகர்வோரால் காசோலை செலுத்துகை குறித்த ஒருசில இடர்ப்பாடுகள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதாலும்,

மற்றும், நுகர்வோரால் காசோலை செலுத்துகை முறையை மீட்டுக்கொடுத்தல் பொறுத்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஒருசில திருத்தங்களை பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம் பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது:—

## 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(*a*) இந்த விதித் தொகுப்பு, 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்படும்.

(*b*) இது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அது வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் 15ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்:**

(*a*) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 15ஆம் ஒழுங்குமுறை விதியில், (2)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், இரண்டாம் வாக்கியத்தில், ''மின் பகிர்வு உரிமம்தாரர்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு ''அல்லது மேற்சொன்ன மின் பகிர்வு உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்டவாறு மின்னணுவியல் செலுத்துகை மூலம்'' என்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(*b*) (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில்,–

(*i*) முதல் வாக்கியத்தில், மின் பகிர்வு அலுவலகத்தின் இடம் அமைந்திருக்கிறவிடத்து, என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது மின் பகிர்வு உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்டவாறு மின்னணுவியல் செலுத்துகை மூலம்'' என்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(*ii*) ஏழாம் வாக்கியத்தில் வரும் ''இரண்டாம் சந்தர்ப்பத்திற்காக'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''நான்காம் சந்தர்ப்பம் வரை'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 008,
2009 ஜூன் 22.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்.*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU